**சிவகாசி நகர்மன்றம்**
**சாதாரணக் கூட்டம்**

**நகராட்சி அலுவலகம்.**
**சாதாரணக்கூட்டம் எண் .** **நாள் : 30.11.2020.**

நிகழும் திருவள்ளுவராண்டு 2049 சார்வரி வருடம் கார்த்திகை திங்கள் 15 ஆம் நாள் 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ம் தேதி திங்கள்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திரு. ப.கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.,எம்பில்.,**
**தனி அலுவலர்.**

**பொருள் :**

1. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் TN-67 AP 0763 வாகனத்திற்கு (FC) தகுதிச் சான்று பெறுவதற்கும் மேற்படி வாகனத்தின் பழுது பணிகளை நீக்கம் செய்து மற்றும் தேவையான உதிரி பாகங்களை மாற்றி சரி செய்யும் பணிக்கு தொகை ரூ.70,000/-க்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 1031 நாள்:29.10.2020-ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 10.11.2020 தேதி ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விபரம் | தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ் 3/1396-A, சாத்தூர் ரோடு, சிவகாசி | 71,000/- |
| 2. | நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், 3/1396/1, சாத்தூர் ரோடு, சிவகாசி. | 69,860/- |

வரப்பெற்ற 2 (இரண்டு) ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் தந்துள்ள வரிசை எண்-2ல் உள்ள நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், 3/1396/1, சாத்தூர் ரோடு, சிவகாசி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி நகர் மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.3193/2020/எச்2
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்:1038

2. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் (SBM) இந்நகராட்சி, குப்பையில்லா நகராட்சியாக ( **Carbage Free City** ) மூன்று நட்சதிர அங்கீகாரம் ( **3 STAR RATING**) பெறுவதன் ஓர் அங்கமாக பொது மக்களிடமிருந்து ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அது குறித்து 15 நாட்களுக்குள் தெரிவிக்க 02.11.2020 அன்று தினகரன் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. ஆனால் இதுநாள் வரை பொது மக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் வரப்பெறவில்லை. எனவே இந்நகராட்சியை குப்பையில்லா நகராட்சியாக ( **Carbage Free City**) அறிவிக்கவும் மூன்று நட்சத்திர அங்கீகாரம் ( **3 STAR RATING** ) பெற விண்ணப்பிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 7252 / 2016 / எச்1 )**
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்:1039

3. சிவகாசி நகராட்சியில், **வருவாய்நிதியில் 2014-2015ம் ஆண்டில் சிவன் மாட வீதியில் உள்ள வணிக வளாக கடை எண்.21க்கு வைப்புத் தொகை மற்றும் மின்கட்டண வைப்புத் தொகையும் மொத்தம் சேர்த்து ரூ.46,000/- ஒப்பந்ததாரர்** திரு.D.முத்தையா என்பவர் பெயரில் செலுத்தப்பட்டுள்ளது. அவற்றை காலங்கடந்த வைப்பு தொகைப் பதிவேடு-2012-2013 முதல் 2014-2015 பதிவேடு வால்யூம்-III கணக்கு தலைப்பு எண்

: 4016க்குரிய பதிவேடு பக்கங்களில் 78, 95-ல் கீழ்க்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்னார் 31.05.2020 முதல் இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கடை வாடகை பாக்கி தொகை ரூ.24,992/- அ4 பிரிவில் நிலுவையாக உள்ளதாக வருவாய் ஆய்வாளர் அவர்களது குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வருவாய் ஆய்வாளரின் குறிப்பின்படி தொகை ரூ.24,992/-ஐ மேற்படி வைப்புத் தொகை ரூ.46,000/-லிருந்து பிடித்தம் செய்து ஈடு செய்த தொகை போக மீதமுள்ள தொகை ரூ.21008/-ஐ திரு.D.முத்தையா, ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு 4016 RF | பணியின் பெயர் | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு ஆண்டு | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண் | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பதிவேட்டின் வரிசை எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2013-2013 முதல் 2014-2015 வரை வால்யூம்-III | சிவன்மாட வீதி கடை எண்.21 மின் கட்டண வைப்பத் தொகை இரசீது 1408964 | 2014-2015 | 78 | 294 | 16,000 |
| 2 | 2013-2013 முதல் 2014-2015 வரை வால்யூம்-III | சிவன்மாட வீதி கடை எண்.21 வைப்புத் தொகை மற்றும் மின் கட்டண வைப்பத் தொகை இரசீது எண்.1405546, | 2014-2015 | 95 | 3 | 30,000 |
| | | | | | **மொத்தம்** | **46,000** |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 3109/2020/பி4
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்:1040

4. சிவகாசி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN-95 C 1816-க்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை சரி செய்யவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.35,000/-க்கும் (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மேற்படி தொகையினை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்ற தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5605 / 2020 / எச்2 )**
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்:1041

5. சிவகாசி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN- 95C 1804-க்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை சரி செய்யவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10,000/-க்கும் (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மேற்படி தொகையினை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 5316 / 2020 / எச்2**
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்:1042

6. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் (SBM) இந்நகராட்சி, திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சி (ODF+) என சான்றிதழ் பெறுவதன் ஓர் அங்கமாக பொது மக்களிடமிருந்து ஆட்பேசனைகள் ஏதும் இருப்பின் அது குறித்து 15 நாட்களுக்குள் தெரிவிக்க 31.10.2020 அன்று தினகரன் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. ஆனால் இதுநாள் வரை பொது மக்களிடமிருந்து ஆட்பேசனை ஏதும் வரப்பெறவில்லை. எனவே இந்நகராட்சியை திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சியாக (ODF+) அறிவிக்கவும், ODF+ சான்றிதழ் பெற விண்ணப்பிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 7252 / 2020 / எச்1 )**
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்:1043

7. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் TN-84 V 1104 TATA ACE வாகனத்திற்கு (FC) தகுதிச் சான்று பெறுவதற்கும் மேற்படி வாகனத்தின் பழுது பணிகளை நீக்கம் செய்து மற்றும் தேவையான உதிரி பாகங்களை மாற்றி சரி செய்யும் பணிக்கு தொகை ரூ.40,000/-க்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 1032 நாள்: 29.10.2020-ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 10.11.2020 தேதி ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விபரம் | தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | வெங்கடேஷ் ஆட்டோ மொபைல்ஸ்<br>3/1396-A, சாத்தூர் ரோடு,<br>சிவகாசி | 40,000/- |
| 2. | நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ்,<br>3/1396/1, சாத்தூர் ரோடு,<br>சிவகாசி. | 39,190/- |

வரப்பெற்ற 2 (இரண்டு) ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் தந்துள்ள வரிசை எண்-2ல் உள்ள நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ், 3/1396/1, சாத்தூர் ரோடு, சிவகாசி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதி நகர் மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.3740 /2020/எச்2
அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்:1044

தனி அலுவலர்,
சிவகாசி நகர்மன்றம்.